**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.கே.வி.சசிகுமார் (த/பெ. (லேட்) கே.வேணுகோபால்) இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (எடி2) துறை**

அரசாணை (2ப) எண்.51

நாள்: 20.03.2020

திருவள்ளுவர் ஆண்டு 2051
விகாரி, பங்குனி – 07

படிக்க :–

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்த (எம்) துறை, நாள். 01.08.2018.
2. மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடித ந.க.எண்.61402/நிபி8/1/2019, நாள். 12.11.2019.

******

**ஆணை:-**

பார்வை இரண்டில் படிக்கப்பட்ட மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கடிதத்தில், சேலம் மாவட்டம், மேட்டூர் அனல்மின் நிலைய மருந்தகத்தில் ஆண் செவிலிய உதவியாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது திரு.கே.வேணுகோபால் என்பவர் 01.06.2002ல் பணியிடையே மரணமடைந்தார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 07.06.1952 என்றும், அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 30.06.2010 என்றும் குறிப்பிட்டு, இறந்த அரசு ஊழியரின் மகன் தனக்கு பணிநியமனம் வேண்டி 25.09.2003 அன்று விண்ணப்பித்திருந்தார் என்றும், தனியர் பிறந்த தேதி 11.04.1977 என்றும், திரு.கே.வி.சசிகுமார் என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்ததால், தனியரைத் தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராகப் பணியமர்த்த உத்தரவிடப்பட்டு, அதன்படி இளநிலை உதவியாளராகப் 08.03.2019 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் குறிப்பிட்டு, தனியர் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 08.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கருத்துருவை அரசு பரிசீலித்து, அதனை ஏற்று, திரு.கே.வி.சசிகுமார், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சேர்ந்த நாளான 08.03.2019 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் இசைவுகளை முறையே அவற்றின் அ.சா.எண்.24960/க்யூ1/2019–1, நாள் 11.03.2020 மற்றும் அ.சா.எண்.9448/ஜி2/2020, நாள் 13.03.2020–இல் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பீலா ராஜேஷ்,**
**அரசு செயலாளர்.**

**பெறுநர்**

மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை–600 006.
✓திரு.கே.வி.சசிகுமார், இளநிலை உதவியாளர் (உரிய வழியாக)
மாநில கணக்காயர், சென்னை–600 018.

**நகல்**

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை,சென்னை–600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (தகவுப்பிரிவு) துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஜே. இந்திரா
20/03/2020
பிரிவு அலுவலர்